# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

## I.D.O.P. No. 44/2020 RW2

05.08.2025 **எ.ம..சா.2 ஜெகதீஷ் அமுல்ராஜ் சத்திய வாக்குமூலத்தின் பேரில் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -**

எனது நிருபண வாக்குமூலத்தில் 2ம் பக்கம் 4ம் பத்தியில் பல பெண்களுடன் மனுதாரர் தவறான உறவுக்கு அடிமையாகியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மனுதாரரின் சொந்த தம்பி மனைவி, சின்னப்பன் மகள் அபிதா ஆகியோரைத்தான் பல பெண்கள் என்று நான் குறிப்பிட்டுள்ளேன். எந்த இடத்தில் எந்த தேதியில் அவ்வாறு தவறான உறவு வைத்திருந்தார் என நான் என்னுடைய வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேலும் மேற்படி 4ம் பத்தியில் இது சம்மந்தமாக வேட்டவலம் காவல் நிலையத்தில் பல புகார்களும், நங்காத்தூர் மற்றும் வேட்டவலம் கிறிஸ்துவ பங்கு தந்தையிடம் பலமுறை மனு கொடுத்தோம் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எத்தனை புகார், எந்தெந்த தேதியில் எதிர்மனுதாரரால், மனுதாரருக்கு எதிராக கொடுக்கப்பட்டுள்ளது என நான் குறிப்பிட்டு என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் இல்லை. பங்கு தந்தையிடம் மனு எந்த தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது என என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எந்த தேதியில் நான் பங்கு தந்தை விசாரித்த போது கலந்து கொண்டேன் என்று குறிப்பிட்டு தேதியை நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக கொடுத்த புகார் நகல்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய நிருபண வாக்குமூலம் 2ம் பக்கம், 5ம் பத்தியில் 2018ல் மனுதாரரின் மகள் வேட்டவலம் வீட்டில் தனியாக இருந்தபோது அவருடன் மனுதாரர் தவறாக நடக்க முற்பட்டார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எந்த தேதியில் எந்த மகளுடன் அவ்வாறு மனுதாரர் தவறாக நடக்க முற்பட்டார் என குறிப்பிட்டு நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் சொல்லவில்லை. ஆனால் அன்றைய தினம் திருவண்ணாமலை மகாதீபம் ஆகும். வேட்டவலம் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மனுதாரர் மீது கொடுத்த புகாரின் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் எண் என்ன என்று என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கும், அவரது குழந்தைகளுக்கும் படிப்பு மற்றும் செலவுக்காகவும் மனுதாரர் தான் பணம் செலுத்தினார் என்றும், அதற்கான ரசீது அவரிடம்

உள்ளது என்றும், மேலும் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த ஜீவனாம்ச வழக்கின் தீர்ப்பின்படி மனுதாரரின் சம்பளத்தில் இருந்து 33 சதவீதத்தை பிடித்தம் செய்து எதிர்மனுதாரருக்கு ஜீவனாம்சம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேலும் மனுதாரர் அவரது ஆர்மி குரூப் இன்சூரன்சில் எதிர்மனுதாரருக்கும் அவரது குழந்தைகளுக்கும் ரூ. 55,261/- One Time Deposit செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலும் எனது நிருபண வாக்குமூலத்தில் 2ம் பக்கம் 6ம் பத்தியில் கொடுமையின் உச்சமாக மனுதாரர், எதிர்மனுதாரரை கயிறால் கட்டி உதைப்பார், தடுத்த எதிர்மனுதாரர் தந்தையை அடித்து உதைத்து கத்தியை காட்டி கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அத்தகைய ஒரு சம்பவம் எந்த தேதியில் எந்த நேரத்தில் நடந்தது என்றோ, அந்த சமயம் நான் அங்கு உடன் இருந்தோ என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, ஆனால் நான் உடன் இருந்தது உண்மை. இது சம்மந்தமாக வேட்டவலம் காவல் நிலையத்தில் யார் எப்போது புகார் கொடுத்தது என எனது நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் நிருபண வாக்குமூலம் 3ம் பக்கம் எதிர்மனுதாரர் 3வது முறையாக கருவுற்றிருந்தபோது மனுதாரர் பெண் பிள்ளை பிறந்தால் கொலை செய்து விடுவேன் என எதிர்மனுதாரரை மிரட்டியதால் எதிர்மனுதாரர் மனதளவில் மிகவும் பாதிக்கப்பட்டார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எந்த தேதியில், எந்த இடத்தில் அவ்வாறு மிரட்டினார் என்றோ, அப்போது நான் உடன் இருந்தேன் என்றோ நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆனால் மேற்கண்டவாறு மனுதாரர் எதிர்மனுதாரரை போனில் மிரட்டியதாக 21.10.2009ல் மாலை சுமார் 3.30 மணியளவில் எதிர்மனுதாரர் என்னிடம் மருத்தவமனையில் வைத்து அவரை டெலிவரிக்காக அழைத்து வந்தபோது கூறினார். அவ்வாறு போனில் மிரட்டியதாகவோ, அந்த விவரத்தை மருத்துவமனையில் வைத்து மேற்படி தேதி, நேரத்தில் எதிர்மனுதாரர் என்னிடம் சொன்னதாகவோ என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எந்த தேதியில் அவ்வாறு எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்காக வேட்டவலம் கிறிஸ்துவ பஞ்சாயத்தார் முன்னிலையில் தெரிவித்தார் என என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்காக எதிர்மனுதாரர் என்ன சட்ட நடவடிக்கை எடுத்துள்ளார் என எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர், எதிர்மனுதாரருக்கு எந்த பொருள் உதவியும் செய்யவில்லை என்று எந்த ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் ஆவணங்கள் ஏதும் இல்லை. நான் எதிர்மனுதாரருக்கு அண்ணன் உறவு முறை என்பதாலும், அவருக்கு

சாதகமாக இருக்க வேண்டும் என கருதி, பொய் சங்கதிகளை சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் நங்காத்தூருக்கு சேர்ந்து வாழ வருமாறு எதிர்மனுதாரரை அழைத்த காரணத்தால் அதை தவிர்க்கும் பொருட்டு எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எதிராக மனுதாரர் அவரது தம்பி மனைவியுடன் தவறான உறவு கொண்டு இருந்தார் என பொய்யாக சொல்கின்றார் என்றால் சரியல்ல. மனுதாரர், எதிர்மனுதாரர் வீட்டிற்கு வருவதை தடுக்கும் நோக்கில் தனது மகளிடம் தவறாக நடக்க முயற்சி செய்வதாகவும் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், பொய்யாக மனுதாரர் மீது குற்றம் சொல்கிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் வாங்கிக் கொடுத்த 2 வீடு மற்றும் காலி பிளாட் மற்றும் அனைத்து பொருளாதார உதவிகளையும் பெற்றுக் கொண்டும், மனுதாரரிடம் மற்ற பணப்பலன்களையும் பெற்றுக் கொண்டும், தற்போது எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல் மனுதாரருக்கு எதிராக பொய்யாக கட்சி செய்கிறார் என்றும், அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எதிர்மனுதாரரின் குற்றச்சாட்டிற்கும், மனுதாரருக்கும் தொடர்பு இல்லை என்றும், அதனால் தான் எனது தரப்பில் குற்றச்சாட்டை நிருபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்ய முடியவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மனுதாரர் கேட்டுக் கொண்டபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.